400

வ்யய௵ வைகாசி மீ

ஸம்புடம் 5
ஸஞ்சிகை 5

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

ப்ரசுரிக்குமிடம்:

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,

சென்னை.

JL
N46 5.5
18922

May, 1946
Vol. 5, No. 5

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	98
2.	ப்ரேம ஸேவா	104
3.	திருவாய்மொழி ஐந்தாம் பத்து	107
4.	செய்திகள்	116
5.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	118

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம் தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்யய ௵ வைகாசி ௴	ஸஞ்சிகை 5

"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

18922.

ஸ்ரீ𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 ஸ்ரீ𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
ஸ்ரீ𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
ஸ்ரீ𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவ].

—o—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[5-ம் அங்கம்]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

மஹாமோஹன்.—[தன் மனத்திற்குள்] விவேகனாகிய சத்ருவை ஜயிப்ப தற்கு உத்தமமான உபாயம் எது?— [ப்ரகாசமாய்] இதோ ஞாபகத்திற்கு வருகிறது.

“ப்ரஜ்வலதி ஜாடராக்நௌ க்ஷிப்த்வா யதாவத் சதுர்விதம் ஹவ்யம் ।
ப்ராணாக்நிஹோத்ரமேகம் பரிபால்யதாமிதோ தம்பதிப்யாம் ॥”

வயிற்றிலிருக்கும் ஜாடராக்நி (பசி) எரியும்போதெல்லாம் உடனே அந்த அக்கியில் பக்ஷ்யம் போஜ்யம் ரஸ்யம் சோஷ்யம் பேயம் என்னும் நான்கு வித ஆஹாரங்களையும் தளிகையானவுடனே ஒரு தைவத்துக்கும் ஸமர்ப்பிக்காமல் அப்படியே வயிற்றில் அந்த அக்கியில் உன்னோடேகூடி ஹோமம் செய்கிறேன். யாவஜ்ஜீவம் இவ்விதமான ப்ராணாக்நிஹோத்ரத்தைத் தம்பதிகளான நாம் பரிபாலநம் செய்து வருவோம். ஆஹார நியமம் ஒன்றுமில்லாமல் நம் இஷ்டம்போல் வாய்க்கு வேண்டிய ருசியான உணவுகளை ஸ்வீகரித்து இன்புறுவோம். ‘ஆஹார ஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:’ என்ற உபநிஷத்தைச் சொல்லிக்கொண்டு, அவர்களே ஜாதி ஆச்ரயம் நிமித்தம் முதலியவற்றால் நிர்த்துஷ்டமான - சுத்தமான - ஆஹாரத்தை அவர்கள் ஈசுவரனுக்கு நிவேதநம் செய்துவிட்டு அவர் கொடுத்ததாக உண்ணவேண்டும். இப்படி ஆஹார சுத்திதான் ஸத்வகுணத்திற்கு அடிப்படையான ஆதாரம் என்று அவர்கள் நிச்சயித்திருக்கிறார்கள். அசுத்தமான ஆஹாரத்தினால் புத்தி கெட்டுப்போய் நம்முடைய மோஹ வழியில் திரும்பிவிடுமென்று அவர்கள் சொல்வது சரிதான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன்.

[சாந்தோக்யோபநிஷத்தில் பூமவித்யை முழுவதும் உபதேசித்துவிட்டு, முடிவில், ‘ஆஹாரஶுத்தௌ ஸத்த்வஶுத்தி:, ஸத்த்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி:, ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:’ என்று, ‘ஸர்வ விதத்தாலும் சுத்தமான ஸாத்விகாஹாரத்தால் தான் ப்ரம்ஹ வித்யைக்கு வேண்டிய சுத்தமான ஸத்வ குணம் கைகூடும்; ஆஹாரசுத்தி தான் ஸத்வகுணத்துக்கு அடிப்படை’ என்பதை மிகவும் முக்யமாக வற்புறுத்தியுள்ளது. பகவானும் கீதையில் இது மிகவும் முக்யமென்று வற்புறுத்தினார். இதுபற்றியேதான் ஸ்வாமி தேசிகனும் ஆஹார நியமம் அருளியது. காம க்ரோதாதிகள் அடங்கிய பிறகும் ஜிஹ்வா சாபல்யத்தால் ஆஹாரசுத்தி நியமங்களை அதிக்ரமிக்காமல் ஸாத்விகாஹாரத்தையே ஸ்வீ

கரிக்கும் நியமத்தைக் கைப்பற்றுவிடில், அடங்கிப்போன காம க்ரோதங்களெல்லாம் மறுபடியும் உடனே பதின்படங்கு பலத்தோடு கிளம்பிவிடும். இந்த ஸூக்ஷ்மத்தை அறிந்த மஹாமோஹன் கடைசியாக இந்த வழியில் ஜயம்பெறலாமென்று நினைக்கிறான்.

சாந்தோக்யோபநிஷத்தில் வைச்வாநர வித்யையின் முடிவில் ப்ராணாக்நிஹோத்ரம் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. வைச்வாநர வித்யையில் உபதேசிக்கப் பட்டிருக்கும் வைச்வாநர ப்ரம்ஹ ஜ்ஞாநத்துடன் பஞ்ச ப்ராணாஹுதிகள் என்னும் ப்ராணாக்நிஹோத்ரத்தை அங்கே உபதேசித்தபடி ஜ்ஞாநத்தோடு செய்பவர், ஸர்வ லோகங்களிலும் ஸர்வ ப்ராணிகளிலு முள்ள வைச்வாநர ப்ரம்ஹத்தை ஆராதித்து, அவரையே உண்ணும் சோறாகப் புஜிப்பவராவர்; அவர்களுடைய ஸகல கர்மங்களும் தீயினில் தூசாக எரிந்து, அவர்கள் முக்தி பெறுவரென்று கூறியுள்ளது. மஹாமோஹன் தானும் தன்னுடைய பார்யையும் 'யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம் ஜுஹுயாத்' என்ற விதிப்படி அக்நிஹோத்ரம் செய்யாவிடினும், ப்ரதிதிநமும் பசித்தபொழுதெல்லாப் ஜாடராக்நியில் யதேஷ்டமாக ஸகல விதமான ஆஹாரங்களையும் ஸமர்ப்பித்துக்கொண்டேயிருந்தால் ப்ரதிதிநம் அக்நிஹோத்ரம் செய்தவனாகலாம் என்று பேசுகிறான்.]

[மஹாமோஹன் ஏவலால் துர்மதிதேவி, துர்வாஸனை என்னும் வேலைக்காரியைக் கூப்பிட, அவள் வருகிறாள். இந்தத் துர்வாஸனையும் அவள் பர்த்தா அபிநிவேசனும் மறுபடியும் எட்டாவது அங்கத்தில் வரப்போகிறார்கள்.]

மஹாமோஹன்.—[துர்வாஸனையைப் பார்த்து] அம்மா! காமன், க்ரோதன், லோபன், மதன், மாத்ஸர்யன், டம்பன், ஸ்தம்பன் ஆகிய நமது ஏழு மந்த்ரிகளுக்கு ஏழு முக்தி க்ஷேத்ரங்களென்று ப்ரஸித்தமான ராஜதாநீ பட்டணங்களும், ஏழு ஸமுத்ரங்களோடுகூடிய ஏழு மஹாத்வீபங்களும், மஹா ராஜாதிராஜ பரமேச்வரரான மஹாமோஹராலும், அவர் மஹிஷீ துர்மதீ தேவியாலும், தாநசாஸநமாகத் தத்தம் செய்யப்பட்டதாகக் கணக்கர்களைக் கொண்டு எழுதிவிடச் சொல்லும். மேலும்: 'யார் எதைச் செய்தாலும், எதைச் சாப்பிட்டாலும், எதை யாருக்குக் கொடுத்தாலும், அவைகளெல்லாம் மஹாமோஹனுக்கே அர்ப்பிதம்' என்று ஸமர்ப்பணம் பண்ணச்சொல்லும். 'நம:, ஸ்வதா, ஸ்வாஹா' என்று தேவ பித்ராதிகளுக்கு ஹோமம்செய்வதையெல்லாம் எனக்கு ஹோமம் செய்யச் சொல்லும். [இதனால்: க்ருஷ்ணார்ப்பணத்துக்குப் பதில் மஹாமோஹார்ப்பணம் என்றும், டம்பத்திற்காகவும் காமக்ரோதாதி புரஸ்ஸரமாகவும் செய்யுமவையெல்லாம் மஹாமோஹனுக்கே அர்ப்பிதமாய் வீணாகும் என்பதும் கருத்து.]

துர்வாஸனை.—அப்படியே ஸ்வாமி! [என்று சொல்லிவிட்டுப் போய் விடுகிறாள்.]

[திரைக்குள்ளே வைதாளிகன் என்னும் பட்டு]

“उपहरति स पाशकस्तदा ऽहन्ता सौहार्द्य ... ।
वसतिवरुणशक्रहर्म्याभ्यां स्वाद्यं यारान्तं स्वादि तदाहारम् ॥”

(இந்த நடு மத்யான வேளையில்) துர்மதிதேவியின் வேலைக்காரனான பாசகன், இந்த்ர வருணர்கள் மாளிகைகளிலிருந்து யாராந்தமும் [‘யா’ ‘ரா’ என்னும் எழுத்துக்களைக் கடைசியில் உடையதும்], ‘ஸ்வா’ என்கிற எழுத்தை முதலாக உடையதுமான (ஸ்வாத்யமான) ஆஹாரத்தைத் தங்களுக்கு உபஹாரமாகக் கொண்டு வருகிறான். [இந்த்ர வருணாதி தேவர்களுக்கு வெறும் டம்பயஜ்ஞங்களாக ச்ரத்தையில்லாமல் ஸமர்ப்பிக்கப்படும் ஹவிஸ்ஸுக்களை அவர்கள் ஸ்வீகரிக்காமல் அவை வீணாய்ப்போவது மஹாமோஹனுக்கே அர்ப்பிதம்போல் நிஷ்பலமாகின்றன.] [‘ஸ்வாத்யம்’ என்பதற்கு ருசியுடையதென்றும், ‘ஸ்வா’ என்னும் எழுத்தை முதலெழுத்தாக உடைய பதம் என்றும் பொருள். ‘யாராந்தம்’ என்பதற்குத் தாரையாக விடப்படுவதென்றும், ‘யா’ ‘ரா’ என்னும் எழுத்துக்களைக் கடையெழுத்தாக உடைய இரண்டு பதங்களென்றும் பொருள். ‘ஸ்வாயா’ ‘ஸ்வாரா’ என்னும் இரண்டு பதங்களும் இந்த லக்ஷணம் பொருந்திய பதங்கள்.]

மஹாமோஹன்.—“ப்ராண சப்தத்தால் குறிக்கப்படுவதும், எல்லாருடைய சரீரம் முழுவதும் வ்யாபித்திருப்பதும், எல்லா ஸித்தாந்திகளும் ஒருங்கே ஒப்புவதுமான தேவதைகளான ப்ராணவாயு தேவதைகளை ஆராதிக்கும் காலமான மத்யாஹ்ந ஸமயம் வந்துவிட்டதாக வைதாளிகன் தெரிவிக்கிறான். நாம் அந்தःபுரத்துக்குள் செல்வோம்” என்று சொல்லிக்கொண்டு வெளிப்படுகிறார்கள். ப்ராணவாயு தேவதைகள் உடம்பு முழுவதும் வ்யாபித்து வேலை செய்பவை. ஸூர்யன் கண்ணிற்கு மட்டும் தேவதை; கண்ணில் மட்டும் இருப்பர். இப்படி ஒவ்வொரு தேவதைக்கு ஒவ்வொரு ஸ்தாநம் மட்டுமே. ப்ராணவாயு உடம்பு முழுவதும் ஸஞ்சரித்துத் தேஹம் முழுவதையும் காப்பாற்றுவது. ஆஹாரத்தை உள்ளே ஸமர்ப்பித்து ப்ராணன்களைத் தர்ப்பணம் செய்வதை எல்லா ஸித்தாந்திகளும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது ஸர்வ ஸித்தாந்த ஸித்தமான தத்வமென்று, மஹாமோஹன் தன் ஆஹாராதி ஸுக போக மதத்தை மெச்சிக் கொள்ளுகிறான். இந்த ப்ராண தேவதையைப்போல் ப்ராணன் போன்ற ஸ்த்ரீ தேவதைகளையும் அவன் ஒப்புக்கொள்கிறானென்றும் ரஸம். அவர்களும் ஸர்வ ஸித்தாந்த ஸித்த தேவதைகள்.

ஐந்தாம் அங்கம் முற்றிற்று.

ஆறும் அங்கம்

[கஞ்சுகீ என்னும் வயது முதிர்ந்த அந்தःபுர வேலைக்காரன் ப்ரவேசிக்கிறான்.]

கஞ்சுகீ.—நான் தர்ப்ப புத்ரனான ஸ்தம்பன்; மஹாமோஹனுடைய அரண்மனை வாயில் காப்போன்.

"வஸிஹிஸவிஸஹா ஷிவகூஷஉ ஹொவா நகவுூம்
ஞுசதவஷ உயிஸஜா ஞ ஙி உவாரா ஜஸெயழ।
தஷவி நியதிஹமூா தாஷரஸீ வெதுயஷி:
ஸஹதாஸதி உயாஉ ஸஎ ஸெஸஸவெ ஸஂஹுரஹிதா ॥"

உடம்பு முழுவதும் மிக நெருக்கமாக மடிப்புகள் விழுந்திருக்கின்றன. இந்த மடிப்புகள் கிட்டக்கிட்ட இருப்பதால், மேலே ஏறுவதற்கு அவை படிக்கட்டுகள்போல் இருக்கின்றன. இந்தப் படிக்கட்டுகள் வழியாக ஜரை என்னும் தள்ளாத கிழவி என் உடம்பு முழுவதிலும் வேகமாய் ஏறி ஆக்ரமிப்பதற்கு லகுவாயிருக்கிறது. அவள் வயது முதிர்ந்த கிழவியாயினும், கிட்டக்கிட்ட உள்ள இம் மடிப்புக்கள் வழியே அதிவேகமாய் மேலே ஏறி உடம்பு முழுவதும் ஆக்ரமிக்கிருள். என் உடம்பில் ஜரை ஏற, என் உடம்பிலேயே இப்படிப் படிக்கட்டுகள் ஏற்பட்டு விட்டன. ஜரை கிழவியாயினும், அவள் த்வரிதமாய் மேலே ஏறி வ்யாபிப்பதைத் தடுக்க முடியவில்லை. ஜரை இப்படிப் பாடுபடுத்தும் பொழுதும், நான் இளம்பர்வத்தில் கையிற் பிடித்த வேத்ரயஷ்டி (பிரம்புத் தடி) இத்தனை கிழத்தனம் வந்த பிறகும், என் மஹாபாக்யத்தால் எனக்கு ஸஹசாரியாயிருந்து, என் கையைப் பிடித்துக்கொண்டு, கூட ஸஞ்சரிக்கத் தயங்குவதில்லை. பால்யத்தில் அதிகார தோரணைக்கென்று நான் கையிற் பிடித்த அந்தப் பிரம்புத் தடி, தீர்க்க காலம் என்னேடு ஸஹசரித்துப் பழகின விச்வாஸத்தை மறக்காமல், இப்பொழுதும் எனக்குச் சிறந்த துணையாக (அவலம்பமாக) ஒத்தாசை செய்து வருகிருள். 'யஷ்டி' என்பது ஸ்த்ரீலிங்கம். 'யஷ்டி' என்னும் பதத்தை, 'அங்கயஷ்டி, காத்ரயஷ்டி' என்று கடைசியில் வைப்பதில் பெண்மேனியின் மென்மையைச் சொல்லும்; 'அழகிய மெல்லிய மேனியையுடைய பெண்' என்ற பொருள் கொடுக்கும். 'தம் விக்ஷுவெவய—உதீஸஸாஂமயஷி' என்று இளம்பர்வத்தை யுடைய உமாதேவியைக் குமாரஸம்பவம் வர்ணித்தது. பால்யத்தில் கைப்பிடித்த பெண்போன்ற இந்த யஷ்டி, இத்தனை கிழத்தனத்திலும் என்னைக் கைவிடவில்லை. இது என் பெரும்பாக்யம். பால்யத்தில் எனக்கு ஸஹசாரியாக வந்தவள் இப்பொழுதும் ஸஹசாரியா யிருக்கிருள். எனக்கு ஜரை வந்தும் அவளுக்குத் தள்ளாமை யில்லை; எனக்குக் கைகொடுத்து என்னை நடத்திப் போகிருள்.

" நிஸூஂகஸஂ ஸஸணஷிவியாயிநீஹூாம்
நிஷீஷிதொாஉஸிஜஸஸா அ நுவாஜுயாஅ।
உயெூாவயுகூஷி தஉநொஸயஹஂ மதீ நா
வாஂஆா ந ஶாகூதி வயஸூகவுூம் வூஶாஷூழ ॥ "

கிழத்தனத்தால் கீழே விழும் பயம், ராஜகோப பயம், ஆகிய இவ்விரண்டும் என்னை அச்சமில்லாமல் ஸஞ்சரிக்க வொட்டுகிறதில்லை. ராஜாஜ்ஞையால் இட்ட வேலைகளையெல்லாம் நடமாடித்தான் செய்யவேணும். இடுப்போ ஒடிந்ததுபோல் ஸ்வாதீனமில்லை. அதுபோல வேலைசெய்து வயிறு வளர்ப்பதில்

18922

ஆசைக்கு மிகுந்த தள்ளாமையால் எத்தனை தடைகள் பசே பசே நேர்ந்து கொண்டேயிருந்தாலும், இத்தனை தள்ளாமையிலும் இந்த உத்யோகத்தில் ஆசை சாந்தமாவதேயில்லை. வயது மட்டும் மிகவும் சாந்தமாய் (ஓய்ந்துபோய்) விட்டது. ஆசை துளிகூட ஓய்வு பெறவில்லை. 'வயதுமட்டும் அடியோடு மிகவும் ஓய்ந்துவிட்டது' என்ற ரஸத்தை 'நிஸாந்தி' என்று ஆசை விஷயத்திலும், 'வயஸஸ்து ஸுஸாந்தம்' என்று வயஸ் விஷயத்திலும் ப்ரயோகிப்பதால் வ்யஞ்ஜனம் செய்யப்படுகிறது. ஸகல வயதும் 'ஸுஸாந்தம்' என்பதால், ஆசையில் ஒரு கலைகூட சாந்தியடையவில்லையென்று ரஸம்.

ஜரை கிடக்கட்டும். அது ஸகல லோகத்திற்கும் வருவதே. அதை ஒருவரும் தடுக்க முடியாது. அதை ஸஹிக்கலாம். ராஜாஜ்ஞை மிகக் கொடியது. நம் சக்தியை ராஜா பார்ப்பதில்லை. அங்குமிங்கும் ஸஞ்சரிக்கும்படி வேலை ஏவுகிறார். அவர் இட்ட வேலையைச் செய்யவிட்டால் தலைபோய்விடும்.

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ "

இது ஸுபாஷித நீவியில் அஸேவ்ய பத்ததியில் 10-ம் ச்லோகம். நீவியில் உள்ள சில ச்லோகங்கள் இந்நாடகத்திலும் உள்ளன. இந்நாடகம் இயற்றும்பொழுது, ஸ்ரீ பாஷ்யம் முப்பதாவ்ருத்தி காலக்ஷேபம் ஸாதித்தாய்விட்டதென்று ஸாதித்துள்ளது. ஒரு ராஜாவுக்கு நீதிப்ரதர்சகமாக ஸாதிக்கப்பட்ட நீவி, இதற்கு முந்தியே ஸாதித்த க்ரந்தமாயிருக்கலாம். நீதி க்ரந்தத்தில் இதுபோன்ற ச்லோகங்கள் மிகவும் ஸங்கதம். மஹாகவிகள் தங்களுடைய ஒரு க்ரந்தத்திலுள்ள ச்லோகங்களை அப்படியே மற்றொரு க்ரந்தத்திலும் சேர்ப்பதுண்டு. ரகுவம்சத்திலும் குமாரஸம்பவத்திலும் பொதுவான ச்லோகங்கள் பல உள்ளன. ஸ்வாமியும் அதுபோல, தம் ச்லோகங்களை அப்படியே வேறு வேறு க்ரந்தங்களில் வைப்பதுண்டு. பாதுகாஸஹஸ்ரத்தில் மட்டும் எல்லா ச்லோகங்களும் புதியன. அதற்குக் காரணம், ஓரிரவில் ஆயிரம் ச்லோகங்கள் கவனம் செய்யவேண்டுமென்கிற நிர்ப்பந்தமான நியமம். பழைய ச்லோகங்களைச் சேர்த்து ஆயிரம் கணக்குப் பண்ணுவது உசிதமல்ல; அது நியமபங்கமும் ஆகும். (இவைகளையெல்லாம் பாதுகாஸஹஸ்ர விமர்சநத்தில் முன்பே காட்டியுள்ளோம்.) ஸுபாஷித நீவியின் உரையில் எழுதிய இந்த ச்லோகத்தின் உரையை அப்படியே இங்கே எழுதுகிறோம். அதைப் பார்த்தாலே இந்த ச்லோகம் ஸுபாஷித நீவியில் மிகவும் ஸங்கதமென்பதும் அந்த க்ரந்தத்துக்கென்றே முதலில் ஸாதிக்கப்பட்டிருக்கவேணுமென்பதும் தெளிவாகும்.

துஷ்டர் ஸ்வபாவங்களைக் காட்டும் முதல் ஐந்து பத்ததிகளும் இங்கே முடிவடைகின்றன. மேலே சான்றோர் ஸ்வபாவங்களைக் காட்டப்போகிறார். அஸேவ்ய பத்ததியும் இங்கே முடிவடைகிறது. ஸேவிக்கத் தகாதவரை ஸேவித்துப் பொருள் ஸம்பாதிப்பது, நாயிலும் கடையான வ்ருத்தியாகும். அவர்கள் ஐச்வர்ய மதத்தால் மத்தர். அவர்கள் என்ன சீறுவரோவென்று நடுவில் மிக ஜாக்ரதையாய் உடம்பு குனிந்து தலைவணங்கி நடக்கவேணும். மாநத்தை அடியோடு துறக்கவேணும். மாநத்தை இழப்பதைவிட ப்ராணனை இழக்கக் கூடிய அபாயமுள்ள திரைகடலோடுதல், மலையேறி ஸஞ்சரித்தல், பூமிக்கு அடியில் சுரங்கம்செய்து கனிகளை வெட்டி உருக்குதல், போர்ப்படையில் சம்பளத்துக்கு அமைந்து போர் வீரனாதல், இவற்றைச் செய்து பணம் ஸம்பாதிக்கலாம். அதில் எல்லாம் மாநம் கெடாது. ப்ராணன் போகலாம். போனாலென்ன? இங்கே துஷ்டபத்ததி முடிவில், நல்லோர் பத்ததிகளை ஆரம்பிக்குமுன், மேல் மஹாபுருஷ பத்ததிக்கு முன், ஜ்ஞாநத்தை அடைந்து ஸம்ஸார ஸமுத்ரத்தைத் தாண்டுவதையும், ப்ரஜ்ஞாந சைலத்தில் ஏறுவதையும், மலையேறித் தவம் புரிவதையும், ரஸாயநக்காரர் புடம்போடுவதுபோல் யோகத்தால் உடம்பைப் புடம் போடுவதையும், காமம் கோபம் முதலிய சத்ருக்களோடு போர்புரிவதையும், ஒருவாறு சப்தங்களால் ஸூசிப்பதும் கவனிக்கத்தக்கது.

கப்பல் யாத்ரை செய்து ஸமுத்ரம் தாண்டி, அக்கரைச் சீமைகள் சென்று, வர்த்தகத்தால் ஏராளமான த்ரவ்யங்கள் தேடப்பட்டு வந்ததும், மலைகளினின்று தாதுக்களை வெட்டியெடுத்துத் திரட்டி வ்யாபாரம் செய்துவந்ததும், பூமியின் அடியில் சுரங்கங்களில் வேலைசெய்து தங்கம் முதலிய கனிகளை வெட்டியெடுத்துப் புடம் போட்டு வந்ததும், அக்காலத்தில் ஸஹஜமாயிருந்துவந்தனவென்று இந்த ச்லோகம் காட்டுகிறது. சுரங்கங்களில் இறங்கி வேலை செய்வதில் உயிருக்கு அபாய மிருந்ததென்றும் விளங்குகின்றது. இப்படிக் கஷ்டப்பட்டு மிக்க அபாயத்துடன் ஸ்வல்ப ப்ரயோஜநத்துக்காகக் கொடிய ராஜஸேவை செய்வதைவிட,

"தைவம் ஸேவிதுமேவ நிஶ்சினுமஹே யோஸௌ தயாளு: புர: ।
தாநாமுஷ்டிமுசே குசேலமுநயே தத்தேஸ்ம வித்தேஶதாம் ॥"

என்று வைராக்ய பஞ்சகத்தில் பாடிய முறையில், ப்ரியமே ஸ்வரூபமாயும், வாத்ஸல்ய ஜலதியாயும், தனக்கு ஸமானமான ஆநந்தாதிகளை வழங்குபவருமான தந்தைதாய் போன்ற ஈச்வர தத்வத்துக்குப் பணிசெய்வதே நன்றென்று வ்யஞ்ஜநம் செய்கிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ப்ரேம ஸேவா

[ஸம்புடம் 5, ஸஞ்சிகை 3, பக்கம் 54-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர், வித்வான், M. A., L. T., திருவையாறு.]

இந்துலேகாவிடம் சொல்லியபடியே மற்ருெரு நாள் மைத்ராவும் அவளது நண்பர்களும் ப்ரேம ஸேவாலயம் சென்ருர்கள். இந்துலேகா வெகு அன்புடன் அவர்களை அழைத்துச் சென்ருள். "நீங்கள் காலை வேளையில் வந்தது மிகவும் நல்லது; இப்பொழுது எங்களுடைய ஸேவை ஆரம்பம்; எங்களுடன் கூட நீங்களும் கலந்துகொள்ளலாம்" என்று சொல்லிப் பூஜா ஸதநத்திற்கு அவர்களுடன் சென்ருள். செல்லும்பொழுதே இந்துலேகா, "குழந்தைகாள்! பூஜா ஸதநத்தில் ஏதும் உரக்கப் பேசாதீர்கள்! நமது கோவில்களில் பாருங்கள். கோவில்கள் ஸர்வேச்வரன் குடிகொண்டிருக்கும் இடங்கள் என்ற பயமும் பக்தியும் உண்டாவது எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது? காதைச் செவிடாக்குகிற சப்தம். ஜனங்கள் என்ன கூச்சல் போடுகிருர்கள். ஒரு ராஜாங்க உத்யோகஸ்தன் ஆபீஸில் எவ்வளவு அமைதி! எவ்வளவு அடக்கம்! எவ்வளவு பயம்! ஸர்வலோக நாதனின் திருக்கோயில்களில் என்ன ஒழுங்கீனம்! என்ன சத்தம்! இந்தக் கூச்சலால் மனத்திற்குத் தெய்வத்தினிடம் ஏடுபடும் பாவனை குறையுமல்லவா? நான் படித்த கிறிஸ்தவ மடாலயங்களில் நடந்துவரும் ஸேவாக்ரமங்களைக் கண்டு அநுபவித்திருக்கிறேன்..........." எனும்பொழுது மைத்ரா குறுக்கிட்டு, "அந்த அந்ய நாட்டு முறைகளைப் பின்பற்றலாமா?" என்ருள்.

இந்து:—"என்? கூடாது என்ரு நம்புகிருய்? தெய்வம் கோயில் கொண்ட இடத்தில் சிற்ருதே பேசாதே, வாயினல் பாடி மனத்தினல் சிந்திப்பதன்றி, வேறு வேலைகளுக்கு இடமேது? உலக வ்யவஹாரங்களைப்பற்றிய பேச்சுக்கள் பரம பாதகமென்று, ஸ்ரீ ராமாநுஜரே முப்பத்திரண்டு அபசாரங்களில் அதை ஒன்ருக எடுத்திருக்கிருரல்லவா? மேனுட்டு நாகரிகத்தில் மிகவும் நல்ல முறைகளாக நாம் நம்புவதை என் எடுத்துக்கொள்ளக்கூடாது? ஆழ்வார்களின் பாசுரங்களை ஸர்வேச்வரனது திருச்செவிகளில் இன்னிசையுடன் படும்படி செய்வது, ஸ்ரீ வைஷ்ணவனை ஒவ்வொருவனின் கடமையன்ருே? இதை ஏற்படுத்தியவர், தாளம் வழங்கித் தமிழ் மறை இன்னிசை தந்த வள்ளலாகிய ஸ்ரீமந் நாதமுனிகள். ஆகையால் சுருதியோடருமறை முறை சொல்வது திருமங்கை மன்னனின் திவ்யாநுபவமன்ருே? இது அந்ய நாட்டு முறையல்ல. அப்படி இருந்தாலும் நாம் தாராளமாய்க் கைக்கொள்ளலாம். விமாநங்கள், ஸ்டீமர்கள், ரயில்வண்டிகள், தபால், தந்தி, டெலிபோன், இவைகளை விட்டுவிட்டோமா? விடத்தான் போமா?" எனும்பொழுது அவள் முகத்தில் ஒரு தெய்வீக ஆர்வம் காணப்பட்டது. பூஜாஸதநம் நெருங்கிற்று.

ஒரு விசாலமான ஹாலில் ஓர் ஓரத்தில் உயர்ந்த பீடத்தின்மேல் ஸ்ரீ தேவாதிராஜன் கம்பீரமாக நின்ற திருக்கோலத்துடன் விளங்கிக்கொண்டிருந்தார். அந்தத் தெய்வத் திருவுருவின் பக்கலில் பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் பிள்ளையாகிய ஸ்ரீ ஆண்டாள், புன்னகையும் அருளும் கொழிக்கும் திருமுகத்துடன் நின்றனர். எதிரில் விரிக்கப்பட்ட உயர்ந்த கம்பளங்களில் சில பெண்கள் உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்தனர். சுவரில் மாடங்களில் ஆங்காங்கு ஆழ்வார்களின் திருவுருவங்கள் நின்ற திருக்கோலத்துடன் வந்தவரை அன்புடனும் ஆதரவுடனும் நோக்கிக்கொண்டிருந்தன. இந்துலேகா, கையால் சைகை காட்டி மைத்ராவையும் அவளது நண்பர்களையும் ஓரிடத்தில் அமரச் செய்தாள். ஒருவர் பின் ஒருவராகக் காஷாய முடுத்த பெண்கள் ஐம்பது பெயரும், மாணவியரான சிறுமியர் நூற்றுக்கு மேற்பட்டவரும் வந்து அமைதியுடன் புகுந்தனர். எங்கிருந்தோ பெரிய மணிச் சத்தம் ஒன்று கேட்டது. மணிச் சத்தம் நின்றவுடன், ஹாலின் பின்புறம் கட்டப்பெற்ற உயர்ந்த சிறு அரங்க விடுதியிலிருந்து இனிய பஞ்சம ச்ருதி கம்பீரமாக எழுந்தது. யாவரும் எழுந்து கைகுவித்தனர். மைத்ராவும் நண்பர்களும் பின்பற்றினர். குயில் போன்ற இனிய அலை மோதும் குரலில் ' உயர்வற உயர்நல முடையவன் எவனவன் ' என்ற இன்னிசை எழுந்தது. ஹாலில் நின்ற மாதர், ' மயர்வற மதிநல மருளினன் எவனவன் ' என்று அதே இன்பமான குரலில் ஓதினர். மேலிருந்து ' அயர்வறு மமரர்கள் அதிபதி எவனவன் ' என்று மனோஹரமான ஒலி எழ, கீழிருந்து வீணையின் இனிய நாதம்போல 'துயரறு சுடரடி தொழுதெழென் மனனே ' என்ற இசைக் கடல் கிளர்ந்தது. இவ்வண்ணம் ஒரு மணி நேரம் பாசுரங்கள் இன்னிசையுடன் அலைமோதி ஆரவாரித்தன. கடைசியில் யாவரும் ஒருங்கு சேர்ந்து, ' திருவாடிப்பூரத்துச் செகத்துதித்தாள் வாழியே ' என்ற வாழித் திருநாமத்தைப் பாடினர். மைத்ராவும் அவளது நண்பர்களும், அந்த ஒரு மணிகாலமும், இந்த உலகை விட்டுச் சிறகுகொண்டு பறந்து சீரிய வேறுலகிற் சேர்ந்ததுபோல் உணர்ந்தனர். பெண்கள் வரிசை வரிசையாக வாய்திறவாது, உரக்கப் பேசாது, சைகைகளாலோ, அல்லது மிகவும் மெதுவான பிறர்க்குக் கேளாத குரலிலோ அவச்யமான ஸமயத்தில் பேசி அமைதியுடன் அகன்றனர்.

மைத்ராவும் நண்பர்களும் பூஜா ஸதநத்தின் வெளிப்புறம் வந்தவுடன் இந்துலேகை புன்சிரிப்புடன், " குழந்தைகளே ! ஆண்டாளுடைய அருமொழிகளை நடத்திக்காட்டுங்கள். ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி உய்யுமாறு எண்ணுங்கள். ஏழைகளை—ஏழைக் கைம்பெண்களை—படிப்பியுங்கள். சபிக்கப்பட்டதுபோல் துன்பமும் தொந்தரவும் நிறைந்த அவர்களின் வாழ்க்கையில் கவிழ்ந்துகிடக்கும் இருளை அகற்றுங்கள். அவர்களுக்கு ஆழ்வார் ஆசார்யர்களின் திவ்ய ஸூக்திகளின் ஒளியைக் காட்டுங்கள். மாலுடனை கணவனை இழந்த அந்தப் பரிதபிக்கத்தக்க பெண்களின் உள்ளத்தில், செய்ய தாமரைக் கண்ணன் செங்கண் மாலின் அன்பைப் புகவிட்டு நிரப்புங்கள்.

வழிகாட்டுவார் அற்றுத் திக்கற்றுக் களிப்பற்று, யாவராலும் சபிக்கப்பட்ட அக்கூட்டத்தை ஒரு தெய்வத் திருக்கூட்ட மாக்குங்கள். அவர்கள் வாழ்வையே ஒரு மார்கழி நோன்பாகக் கொண்டு, அவர்களைக் கைப்பிடித் தழைத்து இன்ப ஒளி யுலகிற்குக் கூட்டிச் செல்லும் கோவிந்தனைக் காட்டிக் கொடுங்கள். இங்கு ஏழை, அநாதை, நோயுற்றோர், அறிவிலி, துயருற்றோர், இவர்களுக்குச் செய்யும் தொண்டே குறைவொன்று மில்லாத கோவிந்தற்குச் செய்யும் குற்றேவல் என்று உலகிற்குக் காட்டுங்கள். ஸ்ரீ ஆண்டாள் தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும் மாரி பெய்ய வன்றோ விரும்பினாள். அப் பச்சிளங் குழந்தையின் ஹ்ருதயத்திற்கு வானகமும் மண்ணகமும் நிகராகுமோ? பெண்ணின் சக்தியை — பெண்ணின் பெருமையை — பெண்ணின் உறுதியை — பெண்ணின் தாய்மையை ஸ்ரீ ஆண்டாளிடம் பாருங்கள்;" எனும்பொழுது மைத்ரா கண்ணீர் பெருக மெய் சிலிர்க்க இந்துலேகாவின் பாதங்களில் நமஸ்கரித்தாள். அவளது நண்பர்கள் அவளைப் பின் பற்றினார்கள். இந்துலேகா தன் கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக்கொண்டு, "செல்லுங்கள், என் கண்மணிகளே! உங்கள் கலாசாலையிலிருந்து வெளிவந்து நீங்கள் நும்பாவை (Ideal) க்குச் சாற்றி நீராடுங்கள். "கோவிந்தற்கோர் குற்றேவல் இம்மைப்பிறவி செய்யாதே இனிப் போய்ச் செய்யும் தவம்தான் என்!" என்று தழதழத்த குரலில் சொன்னாள்.

4

ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமியின் திவ்ய சரித்ரம்.

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய திவ்ய சரிதம், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனின் குமாரர்களால் ப்ரசார மடைந்ததுபோல், ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி கருடபுரம் ஸ்வாமியின் திவ்ய சரித்ரமும் ஷை ஸ்வாமியின் குமாரரான ஸ்ரீ. உ.ப. திருமலாசார்ய ஸ்வாமியால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது. அநேக அழகிய வ்ருத்தங்கள் பொருந்திய 50-ச்லோகங்களால் அவற்றுக்கேற்ற தமிழ் மொழி பெயர்ப்புடன் அந்த க்ரந்தம் ப்ரகாசிக்கிறது. ஸ்ரீஸ்வாமியின் திருவுருவப் படமும் முதலில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தின் விலை எட்டணா. இதனை வாங்க விரும்புவோர்:— "G. திருமலாசார்யர், 31 - ஸ்ரீ கோதண்டராம ஸ்வாமி கோயில் தெரு, பழைய மாம்பலம்" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். [தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.] காஞ்சீபுரம் ஸ்ரீ வைபாகோத்ஸவத்திலும், ஸ்ரீ மதுராந்தகத்தில் ஆனிமீ ப்ரம்ஹோத்ஸவ காலத்திலும் இந்த க்ரந்தம் க்ரயத்துக்குக் கிடைக்கும். இத்தகைய மஹான்களின் சரிதத்தை ஸேவிப்பது, ஆத்ம குணம் உண்டாக ஹேதுவாகு மென்பது பலர் அறிந்ததே.

கூ. லக்ஷ்மீநரஸிம்ஹ தாஸன்.

5

தேரழுந்தூர் ஸ்ரீ. உ.ப. R. நாராயணையங்கார் ஸ்வாமியின் நிர்யாணம்.

நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் தழைத் தோங்குவதற்கே தம் உடல் பொருள் ஆவிகளைத் தந்துதவிய ஸ்ரீ. உ.ப. தேரழுந்தூர் R. நாராயணையங்கார் ஸ்வாமி, 20—4—46 சனிக்கிழமை இரவு ஒரு மணிக்குத் தமது இல்லத்தில் ஆசார்யன் திருவடி யடைந்ததாயும், அவருடைய வியோகத்தால் வருந்தும் அவர் குடும்பத்தார்க்கும் நண்பர்க்கும், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸபையின் சார்பாக அநுசோசக தீர்மாந மொன்று நிறைவேற்றப் பெற்றுத் தெரிவிக்கப் பட்டதென்றும், ஷை ஸபை கார்யதர்சி ஸ்ரீ உ.ப. R. நரஸிம்ஹாசார்யர் தெரிவிக்கிறார்.

ஸ்ரீமதே ஶ்ரீநிவாஸ ப்ரஹ்மணே நம:

திருவாய்மொழி ஐந்தாம் பத்து

[ஒரு ஸம்பாஷணை]

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவங்குடி, பெங்களூர்]

இவ்விடம் நம் அமுதன் விஷயமான ஒரு ஸம்பாஷணையைக் கூறுமாறு என் மனம் தூண்டுகிறது.

"பிணங்கி யமரர் பிதற்றும் குணங்கெழு கொள்கையினனே" என்று நித்யஸூரிகள் எம்பெருமான் கல்யாண குணங்களைப்பற்றிக் 'காருண்யம் உயர்ந்தது; அதைக்காட்டிலும் உயர்ந்தது வாத்ஸல்யம்' என்று ஒருவர்க்கொருவர் வாக்குவாதம் செய்வதுபோன்றது, ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் வாத்ஸல்யமும் காருண்யமும். இதை விளக்கிக்காட்டும் ஓர் ஆச்சர்ய ஸம்பவம்.

ஸ்ரீஸ்வாமி ஒரு ஸமயம் பெங்களூரில் எழுந்தருளியிருந்தபோது எங்கள் பாக்யவசத்தால் அத்யாச்சர்யமாய்ப் பகவத் விஷய காலக்ஷேபம் நடந்துகொண்டிருந்தது. ஐந்தாம் பத்து ஆரம்பித்ததுமுதல் எனக்கு 'அமுதன் பாடல் எப்போது வரப்போகின்றது?' என்ற குதூஹலமும் ஆநந்தமும் இருந்துகொண்டிருந்தன. அன்றைத் தினம் ஸ்வாமி திருமாளிகை எங்கும் அழகிய இழைகோலம்; மங்கள தோரணம்; ஜ்வலிக்கும் தீபங்கள். கண்ணனுக்கு அறுசுவை அமுது; நவநீதம், புஷ்பம், பழம், எல்லாம் வெகு ஸம்ப்ரமம். ஸ்வாமி சிஷ்யர்கள் புத்ரர்கள் அனைவரும் அவ்விடம் இருந்தனர். அவர்கள், "இன்று அம்மாமிக்கு என்ன இவ்வளவு உத்ஸாஹம்! அபரிமிதாநந்தம்! பகவத் விஷயம் ஆரம்ப தினத்தன்று கூட ஒன்றையும் காணோம். 'தம்மூர் தங்கள் பெருமாள்' என்று தனியாய் ஒரு பக்தியும் பெருமையும் போதும்! ஆனாலும் இவ்வளவு பக்ஷபாத மாகாது" என்றனர்.

அதற்குநான், "ஆம்; அதற்கென்ன ஸந்தேஹம்? பக்ஷபாதந்தான். எங்கள் திவ்யதேசம்; எங்கள் குலதநம்; எங்கள் ஆராவமுதன். 'அறியாக் காலத்து அடிமைக்க ணன்பு செய்வித்து' என்று ஆழ்வார்கள் போற்றினாற்போல், சிறு வயதிலேயே என் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அழகுக் கடல் அவன். அதிருக்கட்டும். நமது ஆசார்ய பரம்பரைக்கு ஆராவமுதன் செய்தருளிய உபகாரம் அபரிமித மல்லவா? அமுதன் பாடல்க ளில்லையேல், திருவாய்மொழி ஆயிரம் பாடல்கள் எங்கே? திவ்ய ப்ரபந்தந்தான் இவ்வுலகில் எவ்விதம் உலாவும்? திவ்ய ப்ரபந்தத்தின் திறவுகோ லன்றோ அமுதன் பாடல் பத்தும்? நாமெவ்வளவு

கொண்டாடினாலும் போதுமோ அதன் அழகு? ஆழ்வார் இம்மோஹன மூர்த்தியை ஸேவித்த தக்ஷணமே

"ஆரா வமுதே அடியே னுடலம் நின்பா லன்பாயே
நீரா யலைந்து கரைய உருக்கு கின்ற நெடுமாலே
சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை
ஏரார் கோலம் திகழக் கிடந்தாய் கண்டே னெம்மானே"

என்று அவன் திவ்ய ஸௌந்தர்யத்திலும் கல்யாண குணங்களிலும் ஆழ்ந்து மங்களாசாஸநம் செய்தருளினார். என்ன உருக்கம்! எத்தகைய ஆர்த்தி! எவ்வளவு அன்பு! ஆழ்வார் உள்ளம் அமுதனிடமே குடிகொண்டது என்பதைப் பளிங்குபோல் எடுத்துக் காட்டுகின்றதல்லவா இப்பாசுரம்? எனக்கு மட்டுமென்ன? உங்களுக்கும் உலகிற்கும் அமுதன் பாடல் அருமருந்தன்றோ?" என்றேன்.

"ஆம்; வாஸ்தவம். இருந்தாலும், கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் இந்நான்கு திவ்யதேசங்களையு மன்றோ நமதாசாரியர்கள் கொண்டாடி உகந்தனர்! அதன் பிறகுதான் மற்ற திவ்யதேசம் என்பது அவர்கள் எண்ணம். இல்லையேல், அமுதன் திருவாய்மொழியையே முதலாவதாகத் தொடங்கி யிருப்பார்க ளல்லவா?" என்றனர் அவர்கள்.

"நல்லது; உங்கள் வார்த்தைகளே இத்திருவாய்மொழியின் மேன்மையைச் சுடர்ச் சோதிபோல் விளக்கிக் காட்டுகின்றனவே. யாராகிலும், மதிப்பிட முடியாத உயர்ந்த ரத்நங்களை ஹாரத்தின் நடுநாயக மணியாக அமைப்பார்களா, அல்லது முதல் கல்லாக இழைப்பார்களா? இதன் அருமை பெருமைகளை அறிந்த ஆசார்யர்கள், இதனை இடைகழியில் ஏற்றி வைத்த விளக்குப்போல் நடுவில் அமைத்திருக்கின்றனர். இதன் ப்ரகாசத்தினால் மற்றவைகளின் மதிப்பும் அழகும் நன்றாய் விளங்குகின்றன. எங்கள் அமுதனைப் பாடிய ஆழ்வார் ஒருவரா, இருவரா? ஏழு ஆழ்வார்கள் மங்களாசாஸநம் செய்து மகிழ்ந்தனர். அவர்கள் அனைவரும் அநேகமாய் அவனைக் கண்ணனாகவே பாவித்துப் புகழ்மாலை சூட்டியிருக்கின்றனர். நமது ஸ்வாமி ஆராதிக்கும் கண்ணன் அழகுக்கடலான அமுதனே யன்றி வேறில்லை என்பது என் எண்ணம்" என்றேன்.

இவ்வளவில் ஸ்வாமி அநுஷ்டாநம் முடிந்து காலக்ஷேபத்திற்கு எழுந்தருளினார். எங்கள் வார்த்தை தடைப்பட்டது. அமுதன் பாடல் பத்தின் பொருளையும் ஸ்வாமி வெகு அழகாய் விஸ்தரித்து அருளிச்செய்த அழகுதான் என்னே! அன்று காலக்ஷேபம் முடிந்தது.

நான்கு மாதங்கள் ஓடி யொளிந்தன. பத்தாம் பத்து ஒன்பதாம் திருவாய்மொழியில் "குடந்தை யெங்கோவலன் குடியடியார்க்கே" என்னும் பாசு

ரம் நடைபெற்றது. மத்யானம் மறுபடியும் வாக்குவாதம் வளர்ந்தது. "இப்பொழுது என்ன சொல்லுகிறீர்கள்? முடிவிலும் எங்கள் அமுதனையேதான் பாடினர் ஆழ்வார். அவருக்கு அமுதனிடம்தான் ஆராக்காதல்; அவன்தான் இஷ்ட தெய்வம்.

"அழுவன் தொழுவன் ஆடிக் காண்பன் பாடி யலற்றுவன்
தழுவல் வினையால் பக்கம் நோக்கி நாணிக் கவிழ்ந்திருப்பன்
செழுவொண் பழனக் குடந்தைக் கிடந்தாய் செந்தா மரைகண்ணா
தொழுவ னேனை உனதாள் சேரும் வகையே சூழ்கண்டாய்."

"சூழ்கண் டாயென் தொல்லை வினையை யறுத்துன் னடிசேரும்
ஊழ்கண் டிருந்தே தூராக் குழிதூர்த் தெனைநா ளகன் றிருப்பன்
வாழ்தொல் புகழார் குடந்தைக் கிடந்தாய் வானோர் கோமானே
யாழி னிசையே அமுதே அறிவின் பயனே அரியேறே".

"அரியே றேயென் னம்பொற் சுடரே செங்கட் கருமுகிலே
எரியே பவளக் குன்றே நாற்றோ ளெந்தா யுனதருளே
பிரியா வடிமை யென்னைக் கொண்டாய்க் குடந்தைத் திருமாலே
தரியே னினியுன் சரணந் தந்தென் சன்மம் களையாயே."

என்று ஆழ்வார் அமுதன் ஸௌந்தர்ய வெள்ளச் சுழலில் அகப்பட்டு மனமுருகித் துதித்தார். அவர் திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்தார். இப்பொழுது அச்சரணாகதியே பலித்துத் திவ்யதேசம் (பரமபதம்) செல்வதாக "குடந்தையெங் கோவலன் குடி யடியார்க்கே" என்னும் பாசுரத்தால் தெரியவருகிறது. மற்ற திவ்யதேசத்து எம்பெருமான்களிடம் செய்த ப்ரபத்தி கைகூடியதாகத் தெரியவில்லை" என்றேன்.

ஸ்வாமி சிஷ்யர்களில் ஒருவர், "அம்மாமி! நீங்கள் சொல்லுவது சரியாகவே புலப்படுகிறது. ஆழ்வாருக்கு இஷ்டதெய்வம் அமுதனாய் இருக்கலாம். ஆனால் ஆசார்யர்கள் ஒருவரும் உங்கள் அமுதனைத் துதிக்கவில்லையே. உங்கள் ஆசார்ய வள்ளல் ஸ்ரீ தேசிகன், வரதராஜன் ஸ்ரீநிவாஸன் ரங்கராஜன் முதலியவர்களைப் புகழ்ந்து போற்றியிருக்கிறார். மற்றும், ஸ்ரீஸ்துதி பூஸ்துதி கோதாஸ்துதி முதலிய அநேக ஸ்துதிகள் செய்தருளினர். அமுதன் ஸ்துதியை அவ்வளவுமுக்யமாக அவர் எண்ணவில்லை. அமுதனை ஸேவித்திருந்தால் மங்களாசாஸநம் செய்யாமலிருப்பரா?" என்றார்.

இதைக் கேட்ட எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. சற்றுத் திகைத்தேன். ஆசார்ய வள்ளல் ஸ்துதிக்காமலிருந்தது சற்றுக் குறைவாகவே தோன்றியது. ஆகிலும் தயங்காமல், "எம்பெருமானுக்குத் தன்னை ஸ்துதிப்பதைக் காட்டிலும், தன் தொண்டர்களை ஸ்துதிப்பது உகப்பு. கம்பநாட்டாழ்வானைச் சடகோப

ஸ்துதி செய்யுமாறு நியமித்தா ரல்லவா? ஆகவே நமது ஆசார்ய ஸார்வ பௌமன் அமுதனைஸ்துதித்த ஆழ்வாரை, பாதுகாஸஹஸ்ர மென்னும் ஆயிரம் சுலோகங்களால் ஸ்துதித்தார். மேலும், திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் ப்ரகாசித்த ப்ரபத்தி சாஸ்த்ரத்தை உபப்ரம்ஹிக்கு மவற்றில் பகவச் சாஸ்த்ரம் ப்ரதானம். இவ்வர்த்தத்தை, 'சித்த ரஞ்ஜநத்தோடே எளிதாகத் தெரிவிக்குமவற்றில், தொண்டருக்கு அமுதுண்ணலாய்ப் பொய்யில் பாடலான ஆழ்வார்கள் அருளிச் செயல் ப்ரதாநம்' என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்திருப்பது கூறினேன். போதாதோ?''

இதைக் கேட்ட அவர்கள், ''அவர் என்னவோ சடகோபனைப் புகழ்ந்தார் என்று ஸந்தர்ப்பத்திற்கு ஸம்பந்த மின்றி ப்ரபந்தத்தைப் போற்றினால் அது அமுதனைப் புகழ்ந்த தாகுமா? அருளிச்செயல் உயர்ந்தது என்பதைப்பற்றிநமக் கென்ன ஸந்தேஹம்? உமதாசார்ய வள்ளல் நேராக ஸ்துதிக்கவில்லை'' என்றார்கள்.

என் கண்டம் அடைத்துக் கண்களில் நீர் ததும்பியது. பதில் சொல்லத் தெரியாமல் தவிக்கும் தருணம். மந்தஹாஸம் தவழும் திருமுகம், கருணை சுரக்கும் திருக்கண்கள், வாத்ஸல்யம் பொங்கும் இன்சொற்கள், இவைகளுடன் ஸ்வாமி ஸௌம்ய மூர்த்தி ப்ரத்யக்ஷதேவதையாய் எதிரில்வந்து தோன்றினார். அவர், ''உனக்கேன் மனக்குறை? ஸ்வாமி தேசிகன் அமுதனை ஸ்துதிக்கவில்லை என்று? நன்றாக ஸ்துதித்தார். தயாசதகம் நூறு சுலோகமும் அமுதனைப் பற்றிய ஸ்துதியேதான்.

''𑌶𑌤𑌕𑌮𑌿𑌦𑌮𑍁𑌦𑌾𑌰𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑌭𑍍𑌯𑌸𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌂
𑌵𑍃𑌷𑌗𑌿𑌰𑌿𑌮𑌧𑌿𑌰𑍁𑌹𑍍𑌯 𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍋𑌹𑌯𑌨𑍍𑌤𑍀।
𑌅𑌨𑌿𑌤𑌰𑌶𑌰𑌣𑌾𑌨𑌾 𑌸𑍍𑌵𑌾𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌽𑌭𑌿𑌷𑌿𑌞𑍍𑌚𑍇𑌤𑍍
𑌶𑌮𑌿𑌤𑌵𑌿𑌵𑌿𑌧𑌪𑌕𑍍𑌷𑌾 𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾॥''

[சதுர்வித புருஷார்த்தங்களையும் அருளவல்ல உதாரமாகிய இந்த நூறு ச்லோகங்களையும் ச்ரத்தா பக்தியுடன் அநுஸந்திக்கும் சரணாகதர்களை ஶார்ங்க பாணியின் கருணையானது எல்லையற்ற ஆநந்தத்தை அருளும் திவ்யதேசத்தில் ஏற்றி ராஜ்யாபிஷேகம் செய்விக்கும்] என்று ஸ்பஷ்டமாய்த்தானே ஸ்வாமி தேசிகன் ஸ்துதித்திருக்கிறார்'' என்றார்.

அப்படியே அனைவரும் ப்ரமித்து நின்றனர். எனக்குண்டான ஆநந்தமும் ஆச்சர்யமும் இவ்வளவு என்று கூற முடியாது. ஆனால் அவர்களில் ஒருவர், ''ஸ்வாமியே இவ்விதம் பரிந்து பேசினால் நாங்கள் என்ன சொல்வது? ஸ்பஷ்டமாய் ஸ்ரீநிவாஸன் தயையைப்பற்றிய ஸ்தோத்ர மல்லவா தயாசதகம்? '𑌶𑌾𑌰𑍍𑌙𑍍𑌗𑌧𑌨𑍍𑌵𑌾𑌨𑍁𑌕𑌮𑍍𑌪𑌾' என்பது ஸ்ரீநிவாஸனின் தயையை யல்லவோ குறிப்பிடுறது!'' என்று தாழ்ந்த குரலில் முணுமுணுத்தார்.

ஸ்வாமி, "ஆம்; வாஸ்தவம்! இருக்கட்டுமே! ஸ்ரீநிவாஸன் அமுதனாய் இருக்கலாம்; அமுதன் ஸ்ரீநிவாஸனாய் இருக்கலாம். தேப்பெருமாளைத் தனியாய் ஆழ்வார் எங்கு மங்களாசாஸநம் செய்திருக்கிறார்? 'அயர்வறு மமரர்க ளதிபதி' என்பதைக்கொண்டு 'ப்ரதமஶதகே விக்ஷ்யவரத:' என்று ஸ்ரீதேசிகன், முதல் பத்து முழுவதும் வரதனைப் பாடியது என்று ஸ்துதித்தார். இதுவும் ஏன் அவ்விதமிருக்கக்கூடாது? மேலும், அமுதன் பாடல் பலச்ருதியில்

"உழலை யென்பின் பேய்ச்சி முலையூ டவளை யுயிருண் டான்
கழல்க ளவையே சரணாக் கொண்ட குருகூர்ச் சடகோபன்
குழலில் மலியச் சொன்ன வோரா யிரத்து ளிப்பத்தும்
மழலை தீர வல்லார் காமர் மானேய் நோக்கி யர்க்கே."

என்று அமுதனைக் கண்ணனாகவே ஆழ்வார் பாவித்ததாகக் 'குடந்தை யெங்கோவலன் குடியடியார்க்கே என்றும் ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. ஆழ்வாருக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும், கண்ணனிடம் மோஹம் அபரிமிதம். ஆகவே, ஆராவமுதன் திருவாய்மொழியை ஸ்துதிக்கும் த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் ஸ்வாமி தேசிகன்,

"நிஸ்ஸமாஹித்யாம் ஸ்வதஸ்ஸ்வாந்த வஸஜநி தயா நந்த்யஹாவப்ரூதா நா
ந்யஸ்தாஶா தீதகீர்த்யா நவிந்நய நதோ நாயகஸ்வாந்த ஸாணா: ।
ஸம்பஶ்லேஷ ப்ரூஷ்யாதியோ மாத நிதாம் ஸதிதா ஸ்யாவஹாஸந்நஹாவா
ஸ்தாஸ்ய ஸ்வ ஸ்யாவயே ஸ்வாந்த ஹரிரிதி ஸம்ஜிக்ஷ்ய ஸாவயாஸாவ க்ருஷ்ண: ॥"

என்றல்லவோ ஸ்துதித்தார். ஸ்வாமிக்குக் கண்ணனே இஷ்டதேவதை. ஆகவே.

"𑌅𑌧𑌰𑌾𑌹𑌿𑌤𑌚𑌾𑌰𑍁𑌵𑌂𑌶𑌨𑌾𑌲𑌾𑌃
𑌮𑌕𑍁𑌟𑌾𑌲𑌮𑍍𑌬𑌿𑌮𑌯𑍂𑌰𑌪𑌿𑌞𑍍𑌛𑌮𑌾𑌲𑌾𑌃 ।
𑌹𑌰𑌿𑌨𑍀𑌲𑌶𑌿𑌲𑌾𑌵𑌿𑌭𑌙𑍍𑌗𑌨𑍀𑌲𑌾𑌃
𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍁 𑌮𑌮𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌪𑍍𑌰𑌯𑌾𑌣𑍇 ॥"

[திருவதரத்தில் வைத்தூதும் புல்லாங்குழலை யுடையவரும், திருமுடியில் தொங்கும் மயில் தோகை மாலையை உடையவரும், துண்டுசெய்யப்பட்ட இந்த்ர நீலமணிபோல் நீல காந்தியுடையவருமாகிய கண்ணபிரானது திவ்யமங்கள விக்ரஹத்தின் தோற்றங்கள் அடியேனுடைய அந்திம காலத்தில் அவச்யம் தோன்றக் கடவன] என்று ப்ரார்த்தித்தார். ஆகவே, கோபாலவிம்சதியே அமுதன் விஷயமான மங்களாசாஸநமாக இருக்கத் தடையென்ன? என்ன சொல்லுகிறாய்? உனக்கு இப்பொழுது த்ருப்திதானே?" என்று கேட்டார். எனக்கு உண்டான ஆநந்த மிகுதியினால் கண்டத்திலிருந்து பேச்சு எழும்பவில்லை. மறுபடியும் ஸ்வாமியே, "க்ருஷ்ணன் என்னும் திருநாமத்தின் பொருள் அநேகம். அவன் மனத்

தையும் கண்களையும் ஆகர்ஷிப்பவன். க்ருஷி செய்பவன். ஜீவாத்மாக்களாகிற பயிரைப் பாதுகாப்பவன். இதையும் தயாஶதகத்தில்,

"ஶரணாகத ஸஸ்யமாலினீயம் வ்ருஷஶைலேஶ க்ருஷீவலம் தினோதி"

[தயையே! சரணாகதர்களாகிற பயிரைக் காப்பாற்றி ஸ்ரீநிவாஸனாகிற பயிராளியை ஸந்தோஷப்படுத்துகிறாய்] என்றருளிச்செய்தார். ஸாதாரணமாய் க்ருஷ்ணன் என்பது கருமை நிறத்தையும் குறிக்கும். கருமை நிறம் கருணையையே விளக்கிக்கட்டும். அது கருணைக் கிருப்பிடம் என்பார்கள். 'கருணைதம் கூஸமுணு: காளிமா கைடபாரே:' என்று ஸ்வாமி, 'எம்பெருமானின் கருமை நிறம் மங்களத்தைக் கொடுக்கட்டும்' என்று ப்ரார்த்தித்தார். க்ருஷ்ணன் என்னும் திருநாமம், பரம் வ்யூஹம் விபவம் அர்ச்சை இந்நான்கு தசைகளிலும் பகவானை அலங்கரித்து விளங்குகின்றன. தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்குவித புருஷார்த்தங்களையும் அருளுபவன் கண்ணன். ஆகையால், கண்ணன் கருணையைப்பற்றிய ஸ்துதியே தயாஶதகம். கண்ணனே ஆராவமுதன் என்பது என் அபிப்ராயம். ஆராவமுதன் பாடலாகிய அமுத ஊற்றிலிருந்து பெருகியதுதான் மற்றைய அமுதவெள்ளம். அவன் திருநாமம் ஒன்றே போதுமே எழேழ் பிறவிக்கும். இத்திவ்ய திருநாமத்தைக் கேட்டவுடன் லோகசாரங்க முனிவர், 'பகவானுடைய ஆயிரம் திருநாமங்களில் இவ்வித இனிமை இவ்லையே!' என்று அவ்வழகுக் கடலை ஸேவித்து இன்புற எண்ணியல்லவோ விரைந்து வந்தார். வேதாந்தங்களின் வடிக்கட்டின ஸாரம் பகவத்விஷயம். வேதாந்தங்களைச் செய்தருளியவர் யாரென்று விளங்கவில்லை. அது தாய் தந்தை யற்ற குழந்தையைப்போல் இருக்கிறது. தமிழ்வேதம் தந்தையை அடையவேண்டி நம்மாழ்வார் வாக்கினின்றும் அவதரித்தது. இதற்கு வக்த்ரு வைலக்ஷண்யம் அதிகம். ஆசையினலன்றோ ஸ்ரீமந்நாதமுனிகள் வேதத்தைக் காட்டிலும் இது முன் செல்லவேண்டும் என்றருளினர். இதையே ஸ்ரீ தேசிகன், தமிழ் வேதமும் ஆத்யந்த மற்றவை தான். மேன்மையை யடைவதன் பொருட்டே அது நம்மாழ்வார் திருவாக்கினின்றும் அவதரித்தது. வேதத்தின் மற்றொரு வடிவத்தை ஆழ்வார் கண்டுபிடித்தார் என்று

"வேணுத்வோபாஶைவங்குஜவஸ உனாவாஸ நாஜஞஹம் தீம்
ஶூந்யாநாம் ப்ருக்ருதிகவநாம் ஸ்ஹ்ருதாம் ஓஜஷவம் தழ ।
வாசை நித்யம் ப்ரணிஹிதயியம் வாஜகேஶம் ஹஹதரு:
ஶவுந்நாஜா நம் ஜனிவிஹஸஜெகவாஜஹம்ஷோத காஜ:॥"

என்று ஸ்துதித்தார். ஸத்வகுணம் மேலிட்டிருப்பவர்களின் தாகம் தணியுமாறு இதிஹாஸ புராணங்களில் வேதத்தின் உட்கருத்தாகிய பகவத் குணம்ருத ஸாரம் விவரித்துக் கூறப்படுகிறது. இவைகள், வேதத்தைப் படிக்க அதிகாரமும் அவகாசமும் பாண்டியத்யமும் அற்றவர்களுக்குப் பரமோபகாரம் செய்கின்றன. ஸ்ரீமத் ராமாயணம் பாரதம் பாகவதம் விஷ்ணு புராணம் முதலிய

க்ரந்தங்களை, ஸ்ரீவால்மீகி வ்யாஸர் பராசரர் முதலியவர்கள், தங்கள் தபோ மஹிமையினாலும், நாரதர் புலஸ்தியர் வஸிஷ்டர் இவர்களிடமிருந்து பெற்ற வரங்களினாலும், அத்யாச்சர்யமாகச் செய்தருளினார்கள். அவைகள், சிலர் மட்டுமே அறியும் தன்மை வாய்ந்த வடமொழியி லுள்ளன. மேலும், அவைகள் ராமன் க்ருஷ்ணன் முதலிய விபவாவதார வைபவங்களைப்பற்றிப் புகழ்ந்து போற்றுகின்றன. நமது ஆழ்வார்களோ என்றால், உபநிஷத்தின் கருத்தையே திவ்ய ப்ரபந்தமாகப் பாடியருளினர். அவர்கள் பகவத் க்ருபையால் அஜ்ஞாந கந்தமற்ற பரமஜ்ஞாநத்தைத் தநமாகப் பெற்றனர். அவர்கள் முக்யமாய் அர்ச்சாவதாரத்தின் அளவற்ற வைபவத்தையே பரக்கப் பாடியுள்ளனர். ஆழ்வார்களுடைய தநம் வலியக் கிடைத்த புதையல் போன்றது. ரிஷிகளின் ஜ்ஞாநமோ பாடுபட்டுத் தேடிய பொருளுக்கு ஸமாநம். க்ருத த்ரேதா த்வாபர யுகங்களில் முனிவர்கள் அந்தந்த யுகங்களுக்குத் தக்கவாறு, ராமன் கண்ணன் முதலிய விபவாவதாரங்களை வர்ணிக்கும் அர்ச்சாவதார மேன்மையையே ஜனங்களுக்குப் புகட்டவேண்டும் என்பதை உத்தேசித்து, திவ்யதேசங்களில் கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான்களை மங்களாசாஸநம் செய்தருளினர். ஆழ்வார் பாடல் இல்லாத சில கோயில்களில் பெரியோர்கள் தீர்த்த பரிக்ரஹம் செய்யாதிருப்பதை இன்றும் அறிகிறோம்.

ஆழ்வார்களுடைய அவதாரங்களைப்பற்றி ஸ்ரீவ்யாஸ பகவான் ஸ்ரீபாகவதத்தில்,

“கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:|
க்வசித் க்வசிந் மஹாராஜ த்ரவிடேஷு ச பூரிஶ:||
தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ|
காவேரீ ச மஹாபுண்யா ப்ரதீசீ ச மஹாநதீ||”

[கலியுகத்திலன்றோ ஸ்ரீமந்நாராயணனையே ஸர்வவித பந்துவாகவும் ஸர்வோபாயமாகவும் ஆச்ரயித்திருக்கிற மஹான்கள், தமிழ் நாட்டில் சிற்சில திவ்யதேசங்களில் அவதரிக்கப்போகின்றனர். அத்தேசங்கள், தாம்ரபர்ணீ, வைகை, பாலாறு, மிக மேன்மையுடைய காவேரீ, மேற்கு ஸமுத்ரத்தை நோக்கிச் செல்லும் மஹாநதீ முதலிய புண்யநதிகளால் அலங்கரிக்கப்பட்டு மேன்மை பொருந்தி விளங்கும்] என்று கொண்டாடினர்.

“ஸுலபா: புருஷா ராஜந் ஸததம் ப்ரியவாதிந:|
அப்ரியஸ்ய ச பத்யஸ்ய வக்தா ஶ்ரோதா ச துர்லப:||”

[உலகில் எப்பொழுதும் ப்ரியமான வார்த்தைகளையே கூறிப் புகழும் மனிதர் அதிகம். கேட்பதற்கு ப்ரிய மில்லாதவைகளாயும், ஹித முள்ளவைகளாயும் இருக்கும் வார்த்தைகளைச் சொல்லுபவனும் அரிது; கேட்பவர்கள் அதினினும் அரிது] என்பது மாரீசன் வார்த்தை. ஆனால் இத்திவ்யப்ரபந்தமோ,

மதுரமாயும் நோயைப் போக்கடிக்கக்கூடியதுமான அருமருந்து; பத்யமாகவும் ஹிதமாகவுமுள்ள அமுதமொழி" என்றிவ்விதம் அருளிச்செய்தார் அம்மஹான்.

அவ்வாத்ஸல்யக் கடலின் முன்னிலையில் வாய்திறந்து பேசுந் திறமை எவருக்குத்தான் உண்டு?

"𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑌿𑌂𑌹 𑌸𑍃𑌗𑌾𑌲𑌯𑍋𑌰𑍍𑌵𑌨𑍇
𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑍍𑌯𑌨𑍍𑌦𑌨𑌿𑌕𑌾𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌯𑍋𑌃 ।
𑌸𑍁𑌰𑌾𑌗𑍍𑌰𑍍𑌯 𑌸𑍌𑌵𑍀𑌰𑌕𑌯𑍋𑌰𑍍𑌯𑌦𑌨𑍍𑌤𑌰𑌂
𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑌂 𑌵𑍈 𑌤𑌵 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌯 𑌚 ॥"

[ஸிம்ஹத்துக்கும் நரிக்கும், ஸமுத்ரத்துக்கும் குட்டைக்கும், சிறந்த தேனுக்கும் கழுநீருக்கும் எவ்வளவு ஏற்றத் தாழ்வு உண்டோ, அவ்வளவு ஏற்றத் தாழ்வுகள் ஸ்ரீராகவனுக்கும் உனக்கும் உண்டு] என்று பிராட்டி அடுக்கடுக்காய் அருளிச்செய்யும் ச்லோகங்கள் நிதர்சநமே யொழிய மற்றவை ஏதுவுமில்லை. அனைவரும் ஆச்சர்யத்தினால் சித்திரப் பதுமையென ப்ரமித்து நின்றனர். அம்மஹானின் வாத்ஸல்யத்தையும் காருண்யத்தையும் கண்டு மட்டிலா மகிழ்ச்சி அடைந்தனர். எனக்கோ உள்ளப் பூரிப்பு, உடல்சிலிர்ப்பு, கண்ணீர்ப் பெருக்கு, கண்ட மடைப்பு, நாத் தழுதழுப்பு உண்டாய்விட்டன. ஒன்றுமே தோன்றவில்லை. எவ்விதமோ ஒருவாறு நமஸ்கரித்து எழுந்தேன். இப்படியும் ஓர் ஆசார்ய கடாக்ஷம் உண்டோ என்று இப்பொழுதும் ஸதா எண்ணி மகிழ்வடைகிறேன்.

ஆழ்வார்களுக்கு எம்பெருமானிடம் பக்தி; அது முதிர்ந்து ஆராக்காதல்; அவரைக்காணாததால் பெருந்துயரம்; அருகில் அவன் வராததால் அத்யந்தம் விரஹம்; பகவத் ஸேவை கிட்டுமோ கிட்டாதோ என்னும் பெரும்பயம்; அவ்வெம்பெருமானைக் கண்டதும் ஆநந்தத் தாண்டவம்; அவ்வமுத வெள்ளத்தை அனைவரும் அள்ளிப் பருகிலையே யெனும் வருத்தம். அவனிடமே பக்திகொண்டு, அவனது திவ்யமங்கள விக்ரஹத்தின் அழகையும், கல்யாண குணங்களையும் அநுபவித்து ஆநந்தியுங்கள். அவன் திருவடித் தாமரைகளில் சரணாகதி செய்து நான்கு வித புருஷார்த்தங்களையும் அடையுங்கள் என்னும் இத்தகைய ஒப்புயர்வற்ற உபதேசமும் ஆழ்ந்த கருத்துக்களும் அமைந்தது இத்திவ்ய ப்ரபந்தம்.

இது நான்மறையின் பொருள் பொதிந்த தாகையால் மிகவும் மேன்மையுடையது. அகஸ்திய முனிவர் பாஷையாகையால் பின்னும் சிறப்புற்றது. பகவத்க்ருபையால் அஜ்ஞாந லேசமின்றி ஆழ்வார்கள் பாடிய ப்ரபந்தமாகையால் பரம பவித்ரமானது. புருஷோத்தமனின் திவ்ய சரித மாகையால், ஸர்வ மங்களங்களையும் அருளும் ப்ரபாவ முற்றது. காநத்திற்கு ஏற்ப ராக தாளம் அமைந்ததாகையால், எம்பெருமானை இன்னிசையால் மகிழ்விக்கும் பெருமையுடையது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ப்ரபந்த ரத்நத்தை அனைவரும் பாடிக் கடைத்தேற

வேண்டுவது அத்யவசியம். இது நம் பாக்ய வசத்தால் நமக்குக் கிடைத்திருக்கும் ஓர் பெரும் புதையல். இதில் ஏற்றத் தாழ்வின்றி ஆபால வ்ருத்தர்கள் பாகம் பெற்றுத் தங்யராகவேண்டுவது அத்யவசியம். இத்திவ்ய ஸபை, அனைவர்க்கும் அப்பாக்யத்தை அளிக்கவேண்டும் என்று ஸ்ரீ ஆராவமுதாழ்வானையும் கோமளவல்லித் தாயாரையும் ப்ரார்த்திக்கிறேன்.

“ஜயதி யதிராஜஸூக்தி: ஜயதி முகுந்தஸ்ய பாதுகாயுகளீ ।
ததுபய தநாஸ்த்ரிவேதீமவந்த்யயந்தோ ஜயந்தி புவி ஸந்த: ॥”

[ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்யஸூக்திகள் ஜயசாலிகளாய் விளங்குகின்றன. அல்லது மோக்ஷ ஸாம்ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் அரசர்கள், நம்மாழ்வார் நாதமுனிகள் ஆளவந்தார் ஸ்ரீ பாஷ்யகாரர் முதலியவர்கள். அவர்களால் அருளிச்செய்யப்பட்ட தத்வம் ஹிதம் புருஷார்த்தம், இவைகளைப் புகட்டும் திவ்ய க்ரந்தங்கள் விஜயஸ்ரீயுடன் விளங்குன்றன. அதாவது: இவர்களுடைய ஸ்ரீஸூக்திகள், வைதிக மத விரோதிகளையும், அவர்களுடைய மத க்ரந்தங்களையும், மஹா மந்த்ரத்தினல் கட்டுண்ட நாகம்போல் அடக்குகின்றன. போகம் மோக்ஷம் இரண்டையும் அருளும் பகவத் பாதுகைகள் ஜயம்பெற்று விளங்குகின்றன. இவைகள் இரண்டையும் பரம தநமாகவுடைய பாகவதோத்தமர்கள் மூன்று வேதங்களும் அவற்றின் உண்மைப் பொருளை யூட்டும் இதிஹாஸம் புராணம் திவ்யப்ரபந்தம் முதலியவைகளும் பயனற்றுப் பாழாகாமல் உலகத்திற்கு எடுத்து உபதேசித்துக் காப்பாற்றுகிறவர்களாய்க் கொண்டு, இந்த விபூதியில் நித்யஸ்ரீ நித்ய மங்களத்துடன், வெற்றிக்கொடி நாட்டி விளங்குகிறார்கள் என்றும், தமது ஆசார்ய வள்ளல் மங்களாசாஸநம் பலித்துக் கொண்டேவருகிறது என்பதற்கும் இத்தகைய வைஷ்ணவஸித்தாந்த ஸபைகளே நிதர்சநம்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ௵ வைகாசிமீ

1௳ செவ்வாய்க்கிழமை	...	சூந்யதிதி : வ்ருஷப ரவி 20-19; வ்ருஷப ஸங்க்ரமண தர்ப்பணம்.
2௳ புதன்கிழமை	...	வ்ருஷப பூர்ணிமா திதி; ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ.
3௳ வியாழக்கிழமை	...	காஞ்சி ஸ்ரீ வரதராஜன் கருடோத்ஸவம்.
5௳ சனிக்கிழமை	...	வ்ருஷப க்ருஷ்ண த்ருதீயை திதி.
6௳ ஞாயிற்றுக்கிழமை	...	அதிதி.
7௳ திங்கட்கிழமை	...	வ்ருஷப க்ருஷ்ண சதுர்த்தி திதி
13௳ ஞாயிற்றுக்கிழமை	...	தசமி - ஏகாதசி திதி த்வயம்.
14௳ திங்கட்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
17௳ வியாழக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை.
23௳ புதன்கிழமை	...	வ்ருஷப சுக்ல ஷஷ்டி திதி.
24௳ வியாழக்கிழமை	...	,, ,, ஸப்தமி ,,
25௳ வெள்ளிக்கிழமை	...	,, ,, அஷ்டமி ,,
26௳ சனிக்கிழமை	...	,, ,, நவமி ,,
27௳ ஞாயிற்றுக்கிழமை	...	,, ,, தசமி ,,
28௳ திங்கட்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
30௳ புதன்கிழமை	...	ஸ்ரீ நம்மாழ்வார் திருநக்ஷத்ரம்
31௳ வியாழக்கிழமை	...	வ்ருஷப சுக்ல சதுர்த்தசி திதி.
32௳ வெள்ளிக்கிழமை	...	சூந்யதிதி: மிதுந ரவி 44-31; மிதுந ஸங்க்ரமண தர்ப்பணம் * சந்த்ர க்ரஹணம்.

* சந்த்ர க்ரஹணம்:— வைகாசி மீ 32 ௳ (14—6—46) வெள்ளிக்கிழமை பௌர்ணமி கேட்டை நக்ஷத்ரத்தில் பூர்ண சந்த்ர க்ரஹணம். க்ரஹணம் கொஞ்சம் குறைவாக ஒன்றேகாலே அரைக்காலே அரை வீசம் [1. 3982]. அன்று பகல் 1¼-மணிக்குள் போஜநம் செய்யவேண்டும். இந்தப் பௌர்ணமிக்கு உபராக தோஷமும் ஸங்க்ரமண தோஷமு மிருப்பதால், வ்ருஷப பூர்ணிமா திதி ச்ராத்தத்தை வைகாசிமீ 2௳ [15—5—46] புதன்கிழமை பண்ணவேண்டும். க்ரஹணம் ராத்ரி 10-14 மணிக்கு ஸ்பர்சம்; 2-4-க்கு மோக்ஷ காலம்.

ஸ்ரீ:

செய்திகள்

1

பன்னிரண்டாவது வார்ஷிக ஸ்ரீராமநவமி உத்ஸவம்

ஸ்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீ ராமாவதாரம் பண்ணி, தர்ம ஸம்ஸ்தாபநம் சரணாகத ரக்ஷணம் முதலிய அநேக அமாநுஷ வ்யாபாரங்களைச் செய்தருளினான் என்பது, இதிஹாஸ ரத்நமாகிய ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸுப்ரஸித்தம். இப்படிப்பட்ட ஸ்ரீமத்

ராமாயண கதை முந்திய வர்ஷங்களைப்போல் இந்த வர்ஷமும் ஸ்ரீராமநவமி திநம் முதல் [10—4—46 முதல் 14—4—46 வரை] ஐந்து நாட்கள் முறையே ஸ்ரீராம ஜநநம், ஸ்ரீ ஸீதா கல்யாணம், ஸ்ரீ பாதுகா பட்டாபிஷேகம், விபீஷண சரணகதி, ஸ்ரீராம பட்டாபிஷேகம் என்று ஐந்து கட்டங்களாகப் பிரித்து, சோகத்தூர் வித்வான் சதாவதாநம் ஸ்ரீ. உப. கோபாலாசார்ய ஸ்வாமியின் குமாரரான வித்வான் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியைக்கொண்டு அதி விமர்சையாய் நடத்தப்பட்டது. அநேக ஆஸ்திக மஹான்களும் பாகவதோத்தமர்களும் ஸந்நிஹிதர்களா யிருந்து ஷை மஹோத்ஸவத்தை நடப்பித்தனர்.

S. K. ஸ்ரீநிவாஸாசார்யர்.

2

ஸம்ஸ்க்ருத பாடசாலை, திருவெவ்வுளூர்

ஷை பாடசாலை ஆரம்பித்து ஸுமார் 12-வர்ஷங்களாய் நிர்விக்நமாய் நடந்து வருகிறது. ப்ரதி வர்ஷமும் கவர்ன்மெண்ட் எண்ட்ரன்ஸ் பரீக்ஷைக்கு வித்யார்த்திகள் தயார் செய்யப்பட்டும், ஒரு ஸம்வத்ஸரம் ப்ரிலிமினரி பரீக்ஷைக்கும் தயார் செய்யப்பட்டும், கவர்ன்மெண்டில் உத்தரவு வாங்கி வித்யார்த்திகள் பரீக்ஷையில் தேறிவருகிறார்கள். வித்யார்த்திகளுக்குப் போஜந வஸதிகள் ஸௌகர்யமாக ஏற்படாததால், போன ஸம்வத்ஸரம் வரையில் அதிக வித்யார்த்திகள் சேரவில்லை என்று பாடசாலாதிகாரிகள் யோசித்து, சென்ற வர்ஷம் வைகாசி மீ 25 உ (7—5—45) ல், வனபர்த்தி எஸ்டேட் மானேஜரும் ரிடயர்ட் தாசில்தாரருமான ஸ்ரீமான் T. R. சடகோப ஐயங்கார் அக்ராஸநத்தின் கீழ்ப் போஜந சாலை (Hostel) ஒன்று ஆரம்பிக்கப்பட்டு, இதுவரை வித்யார்த்திகளுக்கு ஆஹாரம் அளிக்கப்பட்டு வருகிறது. இப்போது பாடசாலை கோடைகால விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது. இவ்விடுமுறை முடிந்ததும் ஆனிமீ 2உ (17—6—46) பாடசாலை மீண்டும் திறக்கப்படும். அட்வான்ஸ் 2, 3, 4, வகுப்புக்களில் படிக்கிறவர்களுக்கும், வேதம் ப்ரபந்தம் இவைகளில் தேர்ந்துள்ள வித்யார்த்திகளுக்கும், மொத்தம் 10-பேர்களுக்கு இலவசமாகப் போஜந மளிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இதில் சேர விரும்பும் வித்யார்த்திகள், இப்பாடசாலையின் மானேஜிங் வைஸ்-ப்ரெஸிடெண்ட், ஸ்ரீமான் சித்தூர் வக்கீல் L. C. ஸுந்தரவரதாசார்ய ஸ்வாமிக்கு எழுத்து மூலம் மனுச் செய்துகொள்ளலாம்.

R. வேதாந்தாசார்யர்.

3

ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரது வார்ஷிக மஹாராதநம்.

பெங்களூர் துளஸி தோட்டத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணன் ஸந்நிதியில், ஸ்ரீ திருக்குடந்தை அழகிய சிங்கரது வார்ஷிகாராதநோத்ஸவம், நிகழும் சித்திரைமீ 8உ (20—4—46) சனிக்கிழமை திநம் திவ்ய ப்ரபந்த பாராயணாதிகள் உபக்ரமிக்கப்பட்டு, தில்லஸ்தாநம் ஸ்ரீ பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகனுடைய ஸாந்நித்யத்தில் 4-நாட்கள் வெகு ஸம்ப்ரமமாகக் கொண்டாடப்பட்டது. 24—4—46 புதன்கிழமை மஹாராதநத்தன்று ஆசார்ய ஸம்பாவனைகளும் சாத்துமறையும் ப்ரஸாத விநியோகங்களும் பகல் 12-மணிக்கு இனிது நடந்தேறின. ஸ்ரீ அழகிய சிங்கர் திருவடிகளா யுள்ளவர்களும், ஸ்ரீ ஸ்வாமி திருவடிகளா யுள்ளவர்களும் சுமார் 100-திருநாமங்கள் குழாங்களாய் ஷை மஹாராதநத்தில் ஸந்நிஹிதர்களாயிருந்து, மஹோத்ஸவத்தை இனிது நடத்திவைத்தது போற்றற் குரியது.

ஒரகடம். கோ. ஸுதர்சந தாஸன்.
[ஸ்ரீ ஸ்வாமி திருவடி]

இதன் துடர்ச்சி 106-ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோகீந்த்ர: ப்ரவிஶ்ய ஜவாத்³ரிகாம் ப்ரஸாத்³யாம்
ஸஞ்ஜீவயத் த்ரிவிதஶாஸ்த்ரதியா: ஸ்வயாஸ்ந ।
கந்யாம்ஶ்ச ஹஸ்தாரண ஶ்ரவணகவராதீந்
ப்ராணாஹுதோ ஸுரவதே வாத்ஸல்யாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர், 30–4–46 ல் திருப்பதிக்கு எழுந்தருளினர். அவ்விடத்தில் ஸ்ரீகோவிந்தராஜன் ஸந்நிதியிலும், 6—5—46 ல் மேலைத் திருப்பதியிலும், மங்களாஶாஸநங்கள் யதாக்ரமமாக நடைபெற்றன.

ஸ்ரீ அழகிய சிங்கரின் யாத்ரோத்ஸவம்

ஸ்ரீ அழகிய சிங்கர் சில தினங்கள் அவ்விடம் எழுந்தருளியிருந்து, பிறகு திருவெவ்வுளூருக்கு எழுந்தருளும்படியாக இருக்குமென்று அறிகிறோம். வரப்போகும் சாதுர்மாஸ்ய வ்ரதம் ப்ராயேண ஸ்ரீமதுராந்தகத்தில் ஸம்பவிக்கலாம்.

* * *

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தீ உத்ஸவத்தைப்பற்றிப் பின்வருமாறு ஸ்ரீ அழகிய சிங்கர் நிர்ணயம் அநுக்ரஹித்திருக்கிறார். "இந்த வர்ஷம் வைகாசிமீ 1௳ செவ்வாய்க்கிழமை பூர்ணமான சதுர்த்தசி இருந்தபோதிலும்,

ஸ்ரீந்ருஸிம்ஹ ஜயந்தீ நிர்ணயம்

சுத்தாதிகமாக மறுநாள் சதுர்த்தசி 2–நாழிகை இருப்பதாலும், சில ஸம்ஹிதா வசநங்களில் ஸங்க்ராந்தி துஷ்டமான சதுர்த்தசி த்யாஜ்யமென்று ஏற்படுவதாலும், வைகாசிமீ 2௳ புதன்கிழமை தினமே ஜயந்தியை அநுஷ்டிக்கவேண்டும். ஸ்ரீ க்ருஷ்ண ஜயந்தி ப்ரகரணத்தில் தசநிர்ணயத்தில் காணப்படும் சில வசநங்களைப் பர்யாலோசனை செய்யும்பொழுதும் சுத்தாதிகமே க்ரஹிக்கப்படவேண்டுமென்று தெரிகிறது." இது ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதியில் பண்டித பரிஷத்தில் செய்யப்பட்ட நிர்ணயம்.

* * *

ஏதோ ஒரு ஸுக்ருத விஶேஷத்தால் பகவானிடத்தில் ஒருவித பக்தியைப் பெற்றுள்ள சில லௌகிக ஆஸ்திகர்கள், அஜ்ஞாதமான ஒரு கர்மத்தின் பலமாக

நமது ஆசார்யர்களும் நித்யகர்மாநுஷ்டாநங்களும்

நித்ய கர்மாநுஷ்டாநங்களிலும் இன்னும் மற்ற சாஸ்த்ர விதிகளிலும் ச்ரத்தை யற்றவர்களாய் வர்த்தித்து வருவதை நாம் பார்க்கிறோம். அவர்களைப் பற்றிய ப்ரஸ்தாவத்தையும், அந்த ப்ரஸ்தாவத்துக்கு ஹேதுவாகச் சில ஸம்பவங்கள் நேர்ந்தபொழுது அவற்றைப் பற்றியும், அவ்வப்

போது ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையில் ப்ரஸ்தாவித்திருக்கிறோம். இப்பொழுது அவர்களுள் ஒருவர் விசித்ரமான ஒரு யுக்திவாதத்தைச் செய்து,'நமது ஆசார்யர்கள் நித்ய நைமித்திக கர்மங்களின் அநுஷ்டாநத்தை ப்ரஹ்ம வித்யைக்கு அவச்யாபேக்ஷிதமான அங்க மென்றும், அஹரஹ: அநுஷ்டிக்கப்படும் அக்கர்மங்களால் நமது பக்தி வளர்கின்ற தென்றும் வற்புறுத்தியிருக்கையிலும், அது அவர்களின் உட்கருத்து அன்றென்றும், வித்யா நிஷ்பத்திக்குக் கர்மங்கள் அநபேக்ஷிதங்கள் என்பதே அவர்களுடைய அபிப்ராயம்' என்றும் ஒரு நிர்ணயத்தை வெளியிட்டிருக்கிறார். அவர் சொல்லும் யுக்தியாவது:—நமது ஸ்ம்ருதிகளில் கணக்கற்ற கர்மங்கள் சொல்லப்பட் டிருக்கையிலும், நமது ஆசார்யர்கள் அவைகளுள் காம்யங்க ளென்று சொல்லப்படும் கர்மங்கள் அவச்யம் அநுஷ்டிக்கப் படவேண்டியவை யல்லவென்று நிர்ணயித்திருக்கிறார்க ளன்றோ? அநுஷ்டாநத்திலும் ஸ்ரீவைஷ்ணவர்கள் காம்ய கர்மங்களை ஆத்யந்திகமாகக் கைவிட்டு விட்டார்கள். அது மாத்ரமன்று; வேறு அநேக கர்மங்களையும் அவர்கள் பரித்யஜித்திருக்கின்றனர். ஒவ்வொரு ஸம்வத்ஸரத்திலும் பித்ருக்களை உத்தேசித்துச் செய்யப்படவேண்டு மென்று ஸ்ம்ருதிகளில் சொல்லப்பட்டுள்ள 96 ஶ்ராத்தங்களுள் சில ஶ்ராத்தங்கள் மாத்ரமே செய்யப்பட்டு வருவதை நாம் பார்க்கிறோம். இதைப் பர்யாப்த மென்று நமது பெரியோர்கள் அங்கீகரித்திருப்பதாகவும் தெரிகின்றது. இவைகளை உட்புகுந்து பார்க்கும்பக்ஷத்தில், கர்மங்களைப் பரிஹரிப்பது தோஷாவஹம் அன்றென்பதே நமது பெரியோர்களின் அந்தர்க்கதமான அபிப்ராய மென்பது வெளிப்படுகின்ற தன்றோ? 'அப்படியானால் இவர்கள் ஸகல கர்மங்களையும் ஏன் நிராகரித்திருக்கக் கூடாது?' என்ற ஒரு கேள்வி பிறக்கலாம். இதற்கு இவர் சொல்லும் ஸமாதாநமாவது:— 'அப்படி முழுவதையும் விலக்குவதற்குத் தேஶ காலங்களின் ஆநுகூல்யம் கிடைக்காமல் இருந்ததே காரணம். ஸந்தர்ப்பங்கள் ஒத்து வந்திருந்தால் செய்திருப்பார்கள்' என்று ஸமாதாநம் சொல்லுகிறார். நமது வேதாந்தத்தை ப்ரவர்த்தித்த ஆசார்யர்கள் காலத்தில் 'பூர்வ மீமாம்ஸகர்கள்' என்று ஒரு வகுப்பினர், 'கர்மாநுஷ்டாநம் ஒன்றே நமது இஷ்ட ஸித்திக்குப் போதுமான ஸாதநம்; தைவம் ஒன்றும் இல்லை' என்னும் நாஸ்திக மதத்தை உத்கோஷித்துக்கொண்டு தேஶம் முழுவதையும் ஆக்ரமித்துவந்திருந்தார்கள். அவர்களை முற்றிலும் எதிர்த்து, 'கர்மமே வேண்டாம்; பக்தி ஒன்றே போதும்' என்பதை ஸ்தாபிப்பது துஸ்ஸாத்யமாகத் தோன்றினபடியால், நமது வேதாந்திகள் ஏகதேசத்தில் மாத்ரம் ப்ரவர்த்தித்தார்கள். ஸ்ரீ ஶங்கராசார்யர், ஜ்ஞாநம் முற்றின தசையில் கர்மங்களை ஒழித்துவிடலா மென்று ஸித்தாந்தித்ததும், ஸ்ரீ பாஷ்யகாரர் பலாபிஸந்தி பூர்வகமாகச் செய்யப்படும் கர்மங்களை நிஷேதித்ததும், அவர்களின் நோக்கத்தை வெளிப்படுத்துகின்றன வில்லையா? பூர்ணமான ஜயத்தைக் கோருகிறவர்கள், அது கிடைப்பது அரிதென்று தோன்றுங் காலத்தில், ஏகதேச லாபத்தைப் பெறுவதற்கு ப்ரயத்நப்படுவது லோகரீதி யன்றோ? இதுவே நமது லௌகிக ஸஹ்ருத் செய்யும் வாதம்.

இந்த லௌகிகர்களுக்கு நாம் சொல்லும் ஸமாதாநம் ஒன்றே. அதாவது:-"நீங்கள் பகவத் கீதையை ப்ரமாண க்ரந்தமாகப் பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அதில் 17-வது அத்யாயத்தின் முதல் ச்லோகத்தால் அர்ஜுநன் பின்வருமாறு ஒரு ப்ரச்நம் செய்கிறுன்:—

"யெ ஶாஸ்த்ரவிதிமுத்ஸ்ருஜ்ய யஜந்தெ ஶ்ரத்தயாந்விதா: ।
தெஷாம் நிஷ்டா து கா க்ருஷ்ண ஸத்த்வமாஹோ ரஜஸ்தம: ॥"

[ஶாஸ்த்ர விதியை உதறிவிட்டு, ஒருவன் தபஸ் முதலியவைகளைப் பூர்ணமான ஶ்ரத்தையுடன் செய்தால், அவனுக்கு அதனுல் பல முண்டோ? உண்டானுல் எவ்வித பலம்?] அதற்கு ஸமாதாநமாகக் கீதாசார்யன் அநுக்ரஹித் திருப்பதாவது:—

"அஶாஸ்த்ரவிஹிதம் கோரம் தப்யந்தெ யெ தபொ ஜநா: ।
.........................தாந்வித்த்யாஸுரநிஶ்சயாந்"

[ஶாஸ்த்ரம் சொல்வதற்கு விருத்தமாக ஒருவன் தபஸ் முதலியவைகளைச் செய்தால், அவைகளை அவன் பூர்ணமான ஶ்ரத்தையுடன் செய்தபோதிலும், அவை பகவச்சாஸநத்திற்கு விபரீதமானவை யாதலால், ஒருவித ஸுக லேஶத்தின் பொருட்டும் ஆகமாட்டா; ப்ரத்யுத, அவை மஹத்தான அநர்த்தங்களையும் விளைவிக்கும்.] இதிலிருந்து, நமது ஆசார்யர்கள் அநுக்ரஹித்திருக்கும் நிர்ணயம், அவர்கள் ஸ்வகபோல கல்பிதமாகவாவது, அல்லது கால தேஶ நிர்ப்பந்தத்தை ஆலோசித்தாவது செய்யப்பட்டதன்று என்பது தெளிவாக ஏற்படும். ஸ்ரீ கீதாசார்யனுடைய ஸித்தாந்தத்தையே அவர்கள் வெளியிட்டிருக்கிறுர்கள்.

"தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தெ கார்யாகார்யவ்யவஸ்திதௌ ।"

* * *

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் நியமநத்தின் பேரில், ஸ்ரீ. K. S. வரதராஜ ஐயங்கார் ஸ்வாமி, உத்தமமான சில ஸ்ரீ கோஶங்களைப் பெங்களூரிலிருந்து நமக்கு அனுப்பியிருக்கிறுர். அந்த ஸ்ரீ கோசங்கள் மஹாமஹோபாத்யாய பண்டித ரத்நம் லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியால் அநுக்ரஹிக்கப்பட்டவை. இந்த மாஸத்து ஸஞ்சிகையில் அவைகளின் மதிப்புரையை வெளியிடுவதற்குக் காலம் அதிக்ராந்த மாகிவிட்டபடியால், அடுத்த மாஸத்து ஸஞ்சிகையில் அவை யதாக்ரமம் யதா சக்தி விமர்சிக்கப்படு மென்பதை நாம் இப்பொழுது விண்ணப்பித்துக் கொள்கிறேம். இந்த க்ரந்தங்களின் பெயரும் அவற்றின் க்ரயமும், அவை அகப்படும் இடமும், இந்த ஸஞ்சிகையின் ராப்பர் (மேல் அட்டை) 4-வது பக்கத்தில் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

உத்தமமான சில ஸ்ரீ கோசங்கள்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946-ஏப்ரல் மீத்திய சந்தா வஸூல்

				ரூ.	அ.
3	ஸ்ரீ	M. ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர்	...	3	0
12	,,	R. ஸ்ரீநிவாஸன், பம்பாய்	...	3	0
45	,,	R. ரங்காசாரியர், ஸிம்லா	...	3	0
66	,,	P. V. குப்புஸ்வாமி அய்யங்கார், திருநெல்வேலி	...	3	0
112	,,	V. நாராயணய்யங்கார், பெங்களூர்	...	3	0
113	,,	V. கோபாலஸ்வாமி அய்யங்கார், பெங்களூர்	...	3	0
123	,,	S. ரங்கஸாமி அய்யங்கார், கடலூர்	...	3	0
125	,,	A. பார்த்தஸாரதி, பம்பாய்	...	3	0
167	,,	P. A. ஸ்ரீநிவாஸாசாரியர், மதராஸ்	...	3	0
179	,,	K. R. ராமஸ்வாமி அய்யங்கார், மதராஸ்	...	3	0
205	,,	K. வேங்கடாசாரியர், தளவாய்ப்பேட்டை	...	3	0
294	,,	I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	...	3	0
297	,,	R. ஸாரநாத அய்யங்கார், வ்ருத்தாசலம்	...	3	0
389	,,	R. வீராஸாமி அய்யங்கார், தில்லஸ்தாநம்	...	2	0
393	,,	திவான்பகதூர். ராகவய்யங்கார், ஸ்ரீரங்கம்	...	3	0
485	,,	T. துரைஸாமி அய்யங்கார், பெங்களூர்	...	3	0
544	,,	R. ராமஸ்வாமி அய்யங்கார், பம்பாய்	...	3	0
563	,,	A. R. கோவிந்தராஜய்யங்கார், பல்லாரி	...	3	0
596	,,	S. R. ஸ்ரீநிவாஸாசாரியர், திருவையாறு	...	3	0
615	,,	M. V. நரஸிம்மய்யங்கார், சிங்கநல்லூர்	...	2	0
633	,,	K. S. சேஷாத்ரி, நெய்ரோபி	...	3	0
651	,,	R. ரகுநாத பாட்டராசாரியர், பம்பாய்	...	3	0
719	,,	C. V. ராமாநுஜாசாரியர், பெங்களூர்	...	3	0

குறிப்பு:— 90—ஸ்ரீ. C. V. ராஜகோபாலாசார்யர் என்பதற்கு, ஸ்ரீ. C. V. ஜகந்நாதாசார்யர் என்றும், 714—ஸ்ரீ. V. R. ராகவன் என்பதற்கு ஸ்ரீ. V. R. ரத்நம் என்றும், ஏப்ரல் மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரப்படுத்தியது பிழையாகும். [ஸ-ர்]

Regd. No. M. 4437.

லக்ஷ்மீபுரம் ஸ்ரீ. உ.ப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின் ஸ்ரீ கோசங்கள்.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1. ஸ்ரீ மாநமேய ரஹஸ்ய ச்லோக வார்த்திகம் [illegible] [தேவநாகரி]	5—0	6—0
2. தர்சநோதயம் [illegible] ஸ்ரீ. S. [illegible] [தேவநாகரீ]	4—0	5—0
3. ப்ரபத்தி சாஸ்த்ரம் [illegible] ஸ்ரீ. உ.வே. [illegible] ஸ்ரீ நிவாஸாசார்ய [illegible].] [தெலுங்கு லிபி]	1—8	2—0
4. மீமாம்ஸா பாஷ்ய பூஷணம் [illegible] — ஸ்ரீ. உ.வே. [illegible] ஸ்ரீ நிவாஸாசார்ய [illegible]] [தேவநாகரீ]	1—0	1—8
5. ஸ்ரீமத் சுகபாஷ்யம் [illegible]] [தெலுங்குலிபி]	3—0	4—0

இவை கிடைக்குமிடம்:— [தபால் சார்ஜ் ப்ரத்யேகம்.

ஸ்ரீ. K. S. வரதராஜ ஐயங்கார்,

துளஸி தோட்டம், பெங்களூர் ஸிடி.

[மேல் விலாஸம் இங்க்லீஷில் எழுதப்படவேண்டும்.]

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.